

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாஞ்சான்விடுதி ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.28.50 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, ஒன்றிய செயலாளர்கள் டி. தங்கமணி, கே.எஸ்.ரவி, மாஞ்சான்விடுதி ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் கண்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய மின்மாற்றிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, நவ. 19 -

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், புதிய மின்மாற்றிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி 13.11.2024 அன்று துவக்கி வைத்தார். இது குறித்து அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் மீது அதிக அக்கறைகொண்டு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, மின் வசதி, சாலை வசதி உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி அரிமளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், புதிய மின்மாற்றிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், செங்கீரை மற்றும் ஆலங்குடி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்மாற்றிகள் திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்கள், விவசாயிகள், வணிக நிறுவனங்களுக்கு நிறைவான மின்விநியோகம் வழங்கப்படும்.

எனவே, அனைவரும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ்வின் பொருளாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, அரிமளம் ஒன்றியக் குழுத் தலைவர் மேகலா முத்து, செயற்பொறியாளர் (மின்சார வாரியம்) எம். ஆனந்தாய், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை மத்திய மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி ஆய்வுக் குழு நியமனம்!

## மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தஞ்சாவூர், நவ.19 -

தஞ்சை மத்திய மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும், வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகளை ஆய்வு செய்ய தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. குழு அமைத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க தஞ்சை மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளில் நவம்பர் 23 மற்றும் 24 வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி நடைபெறவுள்ளது. அப்பணியை ஆய்வு செய்வதற்கு கீழ்க்கண்டவாறு ஆய்வுக் குழு நியமிக்கப்படுகிறது.



அதுசமயம், குழுக்களில் உள்ள பொறுப்பாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் நேரில் சென்று பி.எல்.ஏ2 மற்றும் கழக நிர்வாகிகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**173 – திருவையாறு சட்டமன்ற தொகுதி**

1. பி.கேசவன் - மேற்பார்வையாளர்
2. துரை.சந்திரசேகரன் சட்டமன்ற உறுப்பினர்
3. து.செல்வம் - தலைமைச் செயற்குழு உறுப்பினர்
4. அ.புண்ணியமூர்த்தி - மாவட்ட துணைச் செயலாளர்
5. க.முகில்வேந்தன் - மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்

**174 – தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி**

1. ஏ.கே.எஸ்.விஜயன் மேற்பார்வையாளர்
2. டி.கே.ஜி.நீலமேகம் - சட்டமன்ற உறுப்பினர்
3. சண்.இராமநாதன் - மாநகர செயலாளர்
4. சி.இறைவன் - மாவட்ட அவைத்தலைவர்
5. என்.மணிமாறன் - மாவட்ட துணைச் செயலாளர்

**175 – ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதி**

1. இ.ஏ.பரணி கார்த்திகேயன் - மேற்பார்வையாளர்
2. ச.முரசொலி நாடாளுமன்ற உறுப்பினர்
3. எம்.இராமச்சந்திரன் - தலைமைச் செயற்குழு உறுப்பினர்
4. கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி தலைமைச் செயற்குழு உறுப்பினர்
5. எல்.ஜி.அண்ணா மாவட்ட பொருளாளர்

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.




தருமபுரி மேற்கு மாவட்டம்,காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.வீ.டி.கோபால் தலைமையில் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஐக்க சமுத்திரம், ஜிட்டாண்டஅள்ளி, மகேந்திரமங்கலம், பிக்கனஅள்ளி உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு நேரில் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாநில விவசாய அணி துணைச்செயலாளர் சூடப்பட்டி சுப்பிரமணி, ஒன்றிய செயலாளர்கள் முனியப்பன், அன்பழகன், மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

# மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு நேர்காணல், வருகின்ற 22.11.2024 - வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், கடலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. நேர்காணலை நடத்துகிறார். உடன் கழக மாணவரணி தலைவர் இரா.ராஜீவ் காந்தி, கழக மாணவரணி இணை செயலாளர் எஸ்.மோகன், கழக மாணவரணி துணைச் செயலாளர் எம்.எஸ்.ஆனந்த் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே மேற்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தவர்கள் உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சம்பந்தப்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் விண்ணப்பம் செய்தவர்கள் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்து, தாங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.




ஈரோடு தெற்கு மாவட்ட கழக இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் சோலாரில் உள்ள அட்சயம் அறக்கட்டளைக்கு உணவு, மளிகை பொருட்கள் , எல்.இ.டி டிவி ஆகியவற்றை மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துச்சாமி வழங்கினார். நிகழ்வில் மாநில நிர்வாகிகள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், வீரமணி, மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், ப.க.பழனிச்சாமி டி.எஸ்.குமாரசாமி ப.மணிராசு, ஆர் .பொன்னுச்சாமி மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன். பல்கீஸ் பகுதி செயலாளர்கள் க லட்சுமண குமார், வில்லரசம்பட்டி முருகேசன், மாமன்ற உறுப்பினர் தண்டபாணி, கனிமொழி நடராஜன், கலையரசன், சதீஷ் குமார், சசிகுமார், இரா.நித்தின் சிவா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# கழக மருத்துவ அணி சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்கள்!

## கழக மருத்துவ அணி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு!

சென்னை, நவ. 19-

தி.மு.கழக மருத்துவ அணியின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம், கழக மருத்துவ அணி மாநில தலைவர் மரு.கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி. தலைமையில் காணொளிக்காட்சி வாயிலாக நடைபெற்றது. கழக மருத்துவ அணி மாநில செயலாளர் மரு எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் - கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்துவது, டிசம்பர் 2024 முதல் மே 2025 வரை மண்டல அளவில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பாசறை கூட்டங்களை நடத்துவது, மண்டல அளவிலான நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டங்கள், மருத்துவ அணி உறுப்பினர் சேர்க்கை பணிகள், சமூக ஊடகங்களில் மருத்துவ அணி சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால மருத்துவ அணி வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மருத்துவ அணி துணைச் செயலாளர்கள் மரு ஜெ. அருண், மரு இராஜேஸ்வரி மோகன்காந்தி, மரு.அஞ்சுகம் பூபதி, எஸ்.ஏ.இரமேஷ், மரு திலீப்குமார் உள்ளிட்டோர் பல்வேறு கருத்துகளை முன்வைத்தனர்.

மருத்துவ அணி துணைத் தலைவர்கள் மரு செந்தில்நாதன், மரு எ.வ.வே.கம்பன், இணைச் செயலாளர்கள் மரு இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., மரு ஆர்.கோகுல் கிருபாசங்கர், துணைச் செயலாளர்கள் மரு ஆர்.டி.அரசு, மரு ஆர். அண்ணாமலை, மரு கலைகதிரவன், திருமதி திலகவதி ஜெயராஜ், இராஜேஷ் பாபு, மன்சூர் அலிகான், செண்பக விநாயகம் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.



முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா கலந்து கொண்டார். உடன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)அப்தாப் ரசூல், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், குன்றாண்டார்கோவில் ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.பாண்டிச்செல்வி கே.ஆர்.என்.போஸ், கீரனூர் பேரூராட்சித் தலைவர் திருமதி.த.ஜெயமீரா ரவிக்குமார், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) பொறி.பரமசிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணி!

சென்னை, நவ.18–

இந்து சமய அறநிலையத் துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி. கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, சென்னை கிழக்கு மாவட்டம் வடக்கு பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சேர்த்தல், நீக்கல், சரிபார்த்தலுக்கான வாக்காளர் சரிபார்ப்பு முகாம் 16.11.2024, மற்றும் 17.11.2024 தேதிகளில் நடைபெற்றது..

இதில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் – வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், அம்பத்தூர் தொகுதி பார்வையாளருமான சன்முனியாண்டி ஆகியோர் காலை 10.00 மணி முதல் அம்பத்தூர் வடக்கு பகுதி வார்டு 79, 79அ, 80 ,81, 85 86 மற்றும் தெற்கு பகுதி 90, 87 ஆகிய வாக்குச்சாவடிகளுக்கு சென்று ஆய்வுகள் மேற்கொண்டார்கள்.

மேலும் இதில் அம்பத்தூர் வடக்குப் பகுதி பாகநிலை முகவர்கள் BLA2, வட்ட கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள் , கழக முன்னோடிகள் கலந்து கொண்டார்கள்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆரணி ஏ.செல்வரசு

## நவம்பர் 19 (2015)



**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்மீது கொண்ட தீவிரப் பற்றினால், கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மிதிவண்டியில் கிராமந்தோறும் சென்று, கொள்கைகளை பரப்பி கழகத்தை வளர்த்தவர்.**

**ஆரணி நகரச் செயலாளராக தொடங்கி, ஒருங்கிணைந்த வடாற்காடு மாவட்டக் கழகச் செயலாளராக 1986 முதல் 1996 வரை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் முதன்மைத் தொண்டராக திகழ்ந்தவர்**

**கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து சென்று நடத்தியதோடு, தாமும் அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**